1981 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவலும் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவமணியின் இயந்திரங்களை மக்கள் குரலுக்குக் கொடுத்தது சம்பந்தமான தகவல்களை இந்தக் கூட்டத் தொடரிலேயே அச்சடித்து உறுப்பினர்களுக்கு நகல் அளிக்கும் வகையில், அவை மேசைமுன் வைக்கப்படுமா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விரிவான அறிக்கை அச்சடித்து அவைமுன் வைக்கப்படும்.

கிராமத் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை.

* வினா எண். 698—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராமத் தொழிலாளர்களுக்கு கிராஜுட்டி திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென மாநில தொழிலாளர் அமைச்சர்களின் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) 19–7–80 மற்றும் 20–7–80 ஆகிய தினங்களில் மாநில தொழிலாளர்கள் அமைச்சர்களின் மகாநாடு புதுடெல்லியில் நடத்தப்பட்டது. கிராமத் தொழிலாளர்களுக்கு கிராஜுட்டி திட்டத்தை அமுல்படுத்துவது சம்பந்தமாக அம்மகாநாடு விவாதித்தது. 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள கிராம மற்றும் இன்பார்மல் (informal) பகுதிகளை உள்ளடக்கிய அனைத்து நிறுவனங்களுக்கும் பணிக்கொடை வழங்கல் சட்டம் பொருந்துமாறு செய்யப்பட வேண்டும் என அம் மகாநாடு கருத்து கொண்டுள்ளது. அவ்வாறே, இங்ஙனம் செய்யப்படும் முன்பு பணிக்கொடை நிதி ஏற்படுத்துவது சம்பந்த

மாக தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். ஆய்வாளர்கள் நியமனத்திற்கும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். 10—க்கும் குறைவாக டணிக்கு அமர்த்தியுள்ள நிறுவனங்களுக்கு இச்சட்டம் அமுல்படுத்தப்பட சட்டத்தில் இசைவளிக்கும் வழி வகை செய்யப்பட வேண்டும் எனவும் அம்மகாநாட்டில் தெரி விக்கப்பட்டுள்ளது. பணிக்கொடை வழங்கல் சட்டம் மையச சட்ட மாக இருப்பதால், கிராமத் தொழிலாளர்களுக்கு இச்சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து இந்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டம் மைய அரசினால் முடிவு எடுக்கப்பட வேண்டியதாக இருக்கிறது என்பது ஒருபுறம் இருக்க, இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேற நல்ல முறையில் அமுல்படுத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று மாநில அரசு ஏதாவது ஆலோசனைகளை கூறியிருக்கிறதா? அதற்கு மைய அரசிடமிருந்து ஏதாவது பதில் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெல்லியில் நடந்த மகாநாட்டில் இந்த அரசின் சார்பாக நான் கலந்து கொண் டேன். அதில் நாங்கள் எல்லாம் பேசிய பிறகுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர் வாரிய பராமரிப்பிலுள்ள மின்சார மோட்டார்களை பழுது பார்ப்பதில் ஏற்படும் காலதாமதம்.

*வினா எண் 699—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) குடிநீர் சப்ளை செய்யும் மின்சார மோட்டார்கள் பழுதுபட்டால் அதனைப் புதுப்பிக்க குடிநீர் வாரிய பராமரிப்புத் துறை காலதாமதம் செய்வதால் குடிநீர் சப்ளை மாதக்கணக் கில் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதனைப் போக்க அரசு என்ன நட வடிக்கை எடுத்துள்ளது?